(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டிடத்தில் இயங்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி (கதர்த்துறை அமைச்சர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியுள்ளதை அரசு நன்கு அறியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள தஞ்சை மாவட்டம், கோவிந்தபுரத்தில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் தற்பொழுது கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கதர் பட்டு உற்பத்திப் பிரிவில் உபகிளை இயங்கி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிக்கைகள் அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக 1993-94 ஆம் ஆண்டிற்கான குழுவின் நூற்று நாற்பத்தெட்டு முதல் நூற்று ஐம்பத்திரெண்டு வரையிலான (பத்தாவது சட்டமன்றப் பேரவை) ஐந்து அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

3. தகவல் கோரல்.

உறுப்பினர் கொடுத்த அறிவிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி (குறுக்கீடுகள்) திரு. விசுவநாதன், நீங்கள் எதுவும் என்னிடத்

தில் அனுமதி கேட்கவில்லை. (குறுக்கீடுகள்) அதை நான் நிராகரித்து உங்களுக்கு அனுப்பியிருக்கிறேன். உரிமை மீறல் பிரச்சினையை எடுத்துக் கொள்வதற்கில்லை என்று நான் உங்களுக்கு எழுத்து மூலம் தெரிவித்து இருக்கிறேன். நான் எழுத்து மூலம் தெரிவித்த எந்தப் பிரச்சினையையும் குறித்து நீங்கள் என்னுடைய அறையிலே வந்துதான் விளக்கம் கேட்க வேண்டும் என்று விதி இருக்கிறது. உட்காருங்கள். ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு......(குறுக்கீடுகள்) இல்லை, நான் சொல்லி விட்டேன், உட்காருங்கள். உங்களுடைய உரிமை மீறல் பிரச்சினைக்கு எந்த வகையிலே நான் அனுமதி மறுத்து இருக்கிறேன் என்று என்னுடைய அறையிலே வந்துதான் கேட்க வேண்டும். நான் அனுமதி மறுத்து உங்களுக்குக் கடிதம் வாயிலாகத் தெரிவித்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை. நான் உங்களுக்கு அனுமதி மறுத்து எழுதியிருக்கிறேன். அதைப் பற்றி என்னிடைய அறையிலே வந்துதான் நீங்கள் கேட்க வேண்டும். பேரவையிலே எழுப்ப முடியாது.

34. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட வேண்டும். திருத்தங்கள், திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.

Add at the end the following :
but regret to note that no mention is made about :

(i) To provide insurance for the child labour, construction worker and teaching staff etc. with State assistance;

(ii) the action to provide a cleran environment along the Madras sea shore from the Madras Port area to Thiruvanmiyur;

(iii) the exploitation of child labour in construction worh and hotels and the need to check this;

(iv) the steps to be taken against matriculation schools for not effectively enforcing the regulations of the Government;

(v) the steps to be taken to protect the welfare, service conditions and seeurity of sales girls making door to door to propogate products of private firms,